Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
Case No CC.NO.65/2018, Cr.No.9/2018, Kurisilapet PS
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.4, Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | இளையராஜா | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | அருணாச்சலம் | தொழில் | தனியார் வங்கி ஊழியர் |
| கிராமம் | குரிசிலாப்பட்டு | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 38 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 25th day of July 2025.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணையின் தொடர்ச்சி</u> (எதிரிகள் ஆஜர்)**

நான் இதற்கு முன் இவ்வழக்கில் சாட்சியம் அளித்துள்ளேன். விபத்தை ஏற்படுத்திய நபரை என்னால் அடையாளம் காட்ட முடியும். நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரி தான் விபத்தை ஏற்படுத்திய நபர் ஆவார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

திருப்பத்தூரில் இருந்து ஆலங்காயம் செல்லும் சாலை தெற்கிலிருந்து வடக்கு செல்லும் சாலை என்றால் சரிதான். தார் சாலையில் அகலம் சுமார் 22 அடி இருக்கும் என்றால் சரிதான். அதன் இருபுறமும் மண் சாலை இருக்கும் என்றால் சரிதான், அதன் அளவு சுமார் 5 அடி இருக்கும். தார் சாலையின் மேற்கு பக்கம் சௌந்தர்ராஜன் வீடு அமைந்துள்ளது என்றால் சரிதான். சௌந்தர்ராஜன் வீட்டிற்கு கிழக்கு பக்கத்தில் கண்ணாயிரம், தேவன் ஆகியோரின் வீடும் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியும் அமைந்துள்ளது என்றால் சரிதான். இந்த சாலைக்கு கிழக்கு பக்கத்தில் என்னுடைய அண்ணன் வீடு அமைந்துள்ளது என்றால் சரிதான். சௌந்தர்ராஜன் வீட்டிற்கு கிழக்கு பக்கத்தில் கரிகாலன் வீடு உள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியவில்லை. சாலையின் கிழக்கு பக்கத்தில் சேட்டு என்பவரின் சிமெண்ட் சீட் வீடு உள்ளது என்றால் சரிதான். சேட்டின் வீட்டிலிருந்து

என்னுடைய வீடு எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் சுமார் 50–60 மீட்டர் இருக்கும். விபத்து நடந்த இடத்திற்கு வடக்குப்புறமும் தெற்கு புறமும் வேகத்தடை அமைந்துள்ளது என்றால் சரிதான். சாலைக்கு கிழக்கு பக்கத்தில் நாங்கள் பொருள் வாங்க சென்ற கடை அமைந்துள்ளது என்றால் சரிதான். சௌந்தர்ராஜனின் வீட்டிற்கு கிழக்கே விபத்து நடந்தது என்றால் சரிதான். விபத்து நடந்தது மண் சாலையிலா தார் சாலையிலா என்றால் மண் சாலையில் விபத்து நடந்தது. மேற்கில் தார் சாலையின் விளிம்பிலிருந்து எத்தனை அடி தூரத்தில் மண் சாலையில் விபத்து நடந்தது என்றால் சுமார் 2 அடி இருக்கும். காவல் துறையினர் தயார் செய்த மாதிரி வரைபடத்தில் தார் சாலையில் விபத்து நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அப்படி இருக்க நான் மண் சாலையில் விபத்து நடந்ததாக கூறுவது பொய் சாட்சியம் என்றால் சரியல்ல. தார் சாலையின் கிழக்கு புறம் பொருள் வாங்க சென்ற கடையும் என்னுடைய வீடும் அமைந்துள்ள போது நான் மேற்கே செல்லவாய்ப்பில்லை என்றால் சரியல்ல. நீதிமன்ற விசாரணையில் எனது வலது காலின் மீது பேருந்து ஏறி இறங்கியது என்றும் போலீசார் விசாரணையில் அவ்வாறு கூறவில்லை என்றால் சரியல்ல. பேருந்தின் எந்த சக்கரம் எனது காலின் மீது ஏறியது என்றால் இடதுபுற முன் சக்கரம் ஏறியது. அபிநயாவின் தலையின் மீது பேருந்து சக்கரம் ஏறி இறங்கியதாக போலீசார் விசாரணையில் நான் கூறவில்லை என்றால் சரியல்ல. அபிநயாவின் மீது பேருந்து எந்த சக்கரம் ஏறியது என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் நான் மருத்துவரிடம் விபத்து குறித்து கூறினேனா என்றால் அப்போது நான் மயங்கி நிலையில் இருந்தேன். மருத்துவரிடம் விபத்து குறித்து யார் கூறினார்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. விபத்து சமயத்தில் ஆலங்காயத்திலிருந்து திருப்பத்தூர் நோக்கி VSKR என்ற பேருந்து நின்றது என்றால் எனக்கு ஞாபகமில்லை. இந்த பேருந்து பின்புறத்திலிருந்து சாலையை கடக்கும் போது எங்களது கவனக்குறைவின் காரணமாக எதிர் திசையில் வந்த பேருந்து எங்கள் மீது மோதியது என்றால் சரியல்ல. விபத்திற்காக நஷ்ட ஈடு கேட்டு வழக்கு தொடுத்துள்ளதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சௌந்தராஜன் வீட்டிடம் பேருந்து நிறுத்தம் உள்ளதால் அனைத்து பேருந்துகளும் நின்று செல்லும் என்றால் சரிதான். பேருந்து சக்கரம் எனது மீதும் அபிநயாவின் தலையின் மீதும் ஏறியிருந்தால் தலை நசுங்கி இருக்கும் அவ்வாறு ஏற்படாததால் சக்கரம் ஏறவில்லை என்றால் சரியல்ல. எங்களது கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்றாலும் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை :- இல்லை**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

Judicial Magistrate No.II,
Tirupathur.